யோசனைகள் சொல்லப்பட்டதுண்டு. கட்டாய மருத்துவச் சேவை—கம்பல்சரி மெடிகல் சர்வீஸ்—பட்டம்பெறுவதற்கே டாக்டர்கள் ஐந்து வருஷ சேவை என்று வைக்கவேண்டும். அவர்களைப் பலவந்தப்படுத்தி, கட்டாயப்படுத்தி சேவை செய்யச் சொல்வது அவ்வளவு உசிதமா, அது அவ்வளவு தூரம் பயன்படுமா என்பதையும் யோசிக்கவேண்டும். அவர்களுக்கு கிராமங்களிலே இருப்பதற்கு நல்ல வசதிகளைச் செய்துதரவேண்டும், அவர்களுக்கு ஊதிய உயர்வு இவை போன்ற வேறு கவர்ச்சிகள் அட்ராக்ஷன்ஸ் கிராமங்களுக்கு அவர்களை ஈர்க்கக்கூடியவகைகளில் மாநில அரசு
மு.ப. 11–00 கவனம் செலுத்தி டாக்டர்களைக் கிராமங்களில் அமர்த்த வேண்டும்.

பிரைமரி ஹெல்த் சென்டர்கள் நிறைய ஏற்படவேண்டும். ஐயாயிரம், பத்தாயிரம் ஜனத்தொகை உள்ள கிராமங்களில் மருத்துவ மனைகளில் டாக்டர்களும், டாக்டர்களுக்கு உதவுகின்ற மருத்துவமனைப் பணியாளர்களும், ஒரு போஸ்ட்கூட, காலி இல்லாமல் வைத்து மருத்துவப் பணி நிரம்பட நடைபெற வேண்டும். இவற்றையெல்லாம் திட்டமிட்டுச் செய்வது முக்கியம்.

அடுத்தபடியாக, சுகாதாரத்தை எடுத்துக் கொண்டால், சென்னை நகர், கோவை நகர் போன்ற இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க எவ்வளவு வசதிகள் செய்யப்பட வேண்டுமோ அவையெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன என்று கேள்வி நேரத்தின் போதும் மற்றச் சமயங்களிலும் அமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். அதே போன்று கிராமங்களுக்கும், பெரிய கிராமங்களாக இருந்தாலும் சரி, சிறிய கிராமங்களாக இருந்தாலும் சரி, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டும். அவ்வாறு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுப்பதற்காக ஏற்படும் அத்தனை செலவையும் பஞ்சாயத்துக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கு வருமானம் பஞ்சாயத்துகளுக்கு இல்லை. ஆகவே: இந்தத் திட்டத்திற்கு 75 சதவிதம் அரசாங்கம் மானியமாகக் கொடுத்து 25 சதவிகிதத்தை வேண்டுமானால் பஞ்சாயத்து ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்லலாம். அது இல்லையென்றால் பஞ்சாயத்துக்கள் பெருமளவில் மாநில சர்க்காரிடம் கடன் வாங்கி 20 ஆண்டுத் தவணையில் வட்டியுடன் செலுத்த வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் வரியை அதிகப்படுத்துவதன் மூலம் மக்களுக்கு வரிப் பளுவும் அதிகமாகிறது. ஆகவே, மாநில சர்க்கார் தங்களுடைய நிதியிலிருந்தோ, மத்திய சர்க்கார் நிதியிலிருந்தோ பாதுகாக்கப்பட்ட குடிநீருக்காகப் பெரும் அளவு தொகை பெற்று கிராம மக்களுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

4. முதலமைச்சரவர்களுடைய அறிக்கை.

சென்னை நகர தீ விபத்து நிவாரணக் குழு அமைப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, விவாதம், தொடரும் முன்னால் பேரவை விதிகள் 82-ம் படி மாண்புமிகு முதலமைச்சர்

1967 ஜூலை 6]

அவர்கள் பொது முக்கியத்துவம் உள்ள அறிவிப்பு ஒன்றை இப்பேரவைக்குத் தெரியப்படுத்துவார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சென்னையில் தீ விபத்தால் பாதிக்கப்பட்டு வேதனை யடைந்துள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்க முதலமைச்சர் தலைமையில், சட்டப் பேரவைத் தலைவர், அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன், சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. மூக்கையாத் தேவர், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம், முஸ்லீம் கட்சித் தலைவர் திரு. ஹபிபுல்லா பேக், வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சுப்பையா, பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து, சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நல்லசிவம், தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம், குடியரசுக் கட்சித் தலைவர் திரு. கே. பி. எஸ். மணி ஆகியோர் கொண்ட குழுவை அமைத்திருக்கிறேன் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

3. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* **திரு. சி. கோவிந்தராஜன் :** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, மருத்துவ துறையைச் சேர்ந்த மூன்று மானியங்களின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி. இந்தச் சமயத்தில் இதுபற்றி என்னுடைய சில கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அரசினர் முன் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். நம்முடைய நாட்டில் வியாதிகள் பரவுவதற்கும் வளருவதற்கும் அடிப்படையான காரணம் நம்முடைய நாட்டிலுள்ள பொருளாதார நிலைதான். விலைவாசி உயர்வு, சம்பளக்குறைவு, வேலையில்லாத் திண்டாட்டம், இவைகளினால் 'அண்டர் நரிஷ்மெண்ட்' அல்லது 'மால்-நியுட்ரிஷன்' போன்ற காரணத்தால்தான் வியாதிகள் வருகின்றன. எனவே, பொதுவாக ஏழை மக்களுக்கு, அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு அளவு கடந்து வைத்திய சிகிச்சை செய்யவேண்டியது அவசியமாகிறது. அப்படிப்பட்ட மக்களுக்கு வைத்திய சிகிச்சை அளிக்கக்கூடிய முறையில் சில வசதிகளைப் பெருக்கித்தரவேண்டிய அவசியம் என்று கருதுகிறேன்.

முதலாவதாக எடுத்துக் கொண்டால் அரசினர் மருத்துவ மனையில் இலவசமாகச் சிகிச்சை பெறுவதற்கு நிர்ணயித்திருந்த சம்பளத் தொகை மாதம் 100 ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது என்பதாகும். அதற்கு மேல் சம்பளம் இருக்குமானால் இலவசமாக மருத்துவ வசதி கிடைக்கும் நிலைமை இல்லை. இந்த தொகை மிக நீண்ட காலத்திற்குமுன் நிர்ணயிக்கப்பட்ட தொகையாகும். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் ஒரு தொழிலாளி அகவிலைப்படி, சம்பளம் எல்லாம் சேர்த்து ரூ. 130, 140, 150 ரூபாய்